MC. No.18/2025

நாள் :-08.04.2026

எ.ம.சா. 1:-முகமது ஹாஜா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

24.01.2016 அன்று எனக்கும் மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது. அது பெற்றோர்களால் பேசி முடித்த திருமணம்தான். எண். 4/307 நீடூர் தெற்கு தெருவில் திருமணம் முடிந்து வாழ்ந்து வந்தோம். 7 வருட காலம் நானும், மனுதாரரும் நல்ல முறையில் வாழ்ந்து வந்தோம். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மாதம் சுமார் ரூ.10,000/- வருமானம் வரும். நீடுரில் உள்ள வீடு எனது அப்பா பெயரில் தான் உள்ளது. நானும், எனது இரண்டு பிள்ளைகள்தான் அங்கு வசித்து வருகிறோம். எனது அம்மா இருந்தார், அவர் 3 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். திருமடணத்திற்கு பிறகு மனுதாரர் சரவணன் என்பவருடன் தொடர்பு வைத்திருந்ததால் எங்களுக்குள் பிரச்சனை வந்தது. அதற்கான சாட்சிகளோ, ஆவணங்களோ தாக்கல் செய்தேனா என்றால் புகைப்படம் மட்டும் தான் உள்ளது. போலீஸ் ஸ்டேசனில் அந்த பையனுடன் செல்வதாக சொல்லி மனுதாரர் சென்றுவிட்டார். அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சொல்லிவிட்டு மனுதாரர் செல்லவில்லை என்றும், நான் தாக்கல் செய்த புகைப்படமும் இந்த வழக்கிற்கான தயார் செய்து தாக்கல் செய்த புகைப்படம் என்றால் சரியல்ல. மூத்த மகள் ஜாசிரா என்னுடன் இல்லை என்றும், அவளை என்னுடைய சொந்த அக்காவிற்கு தத்து கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு பெண் குழந்தைகளும் மனுதாரர் வசம் தான் 5 வருடத்திற்கு முன் இருந்தனர் என்றும், நான் வலுக்கட்டாயமாக அழைத்து வந்துவிட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. மனுதாரர் தான் அந்த பையனுடன் செல்வதாக சொல்லிவிட்டு ஊரில் எழுதி கொடுத்துவிட்டு சென்றவிட்டார். அந்த லெட்டர் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது நகல் என்பதால் தாக்கல் செய்யவில்லை. நீடூர் கிராமத்தில் எனக்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றும், 4, 5 கார்களை வைத்து ட்ராவல்ஸ்

CJM, MAYILADUTHURAI.

S. M. Haji

வைத்துள்ளேன் என்றும், சுமார் ரூ.2,00,000/- மாதம் சம்பாரிக்கிறேன் என்றும், அதனால் மனுதாரருக்கு நான் ஜுவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருககும் எனக்கு விவாகரத்து எதுவும் நடைபெறாத நிலையில் அவர் என்னுடைய மனைவி என்பதால் அவருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான காரணங்களை கொண்டு எதிருரையும், பிரமாண வாக்குமூலமும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த புகைப்படமே ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும், அதை போலியாக உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு கள்ளதொடர்பு இருப்பதாக கூறி உள்ள பட்சத்தில் அதை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் நான் ஜுவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன் என்று சொன்னால் அவர் வேறு ஒருவருடன் சென்றதால் நான் தயாராக இல்லை. விவாகரத்து வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. இந்த மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், மனுதாரருக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

S. M. Hari

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

8/4/26

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.